இணைப்பு VII

(806 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம்

அறிவிப்புகள், 2009–2010

1. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் பயன்பாட்டிற்கென ரூ.50 இலட்சம் செலவில் வண்ணப் படச்சுருள் பதனிடும் இயந்திரம், சென்சிடோ மீட்டர் மற்றும் டென்சிட்டோ மீட்டர் ஆகிய கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

2. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன நூலகத்திற்கு ரூ.4.50 இலட்சம் செலவில், தற்போதைய தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்கள் மற்றும் திரைப்படக் கலை சார்ந்த புத்தகங்கள் புதிதாக வாங்கி வழங்கப்படுவதுடன், கணினிகள் மற்றும் குளிர்சாதன வசதியுடன் நூலகம் புதுப்பித்து நவீனப்படுத்தப்படும்.

3. செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் உள்ள புகைப்படப் பிரிவில் அனைத்து முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் அரிய பழைய புகைப்பட நெகடிவ் படச்சுருள்கள் உள்ளன. இவற்றை ரூ.13.25 இலட்சம் செலவில் டிஜிட்டல் முறையில் ஸ்கேன் செய்து பொருத்தமாகத் தலைப்பிட்டு, தேவைப்படும்போது தேடி எடுக்க சிறப்பு மென்பொருள் மற்றும் சேர்வர் அமைத்து நீண்ட காலப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் சேமித்து வைக்கப்படும்.

4. செய்தித் துறையின் உயர் அலுவலர்களின் நிருவாகப் பணிகள் களவிளம்பரப் பணிகள் மற்றும் அரசு விழா தொடர்பான பணிகள் தொய்வின்றி நடைபெற பழைய கார்களுக்குப் பதிலாக மூன்று புதிய அம்பாசிடர் கார்கள் ரூ. 14.25 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

5. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலக களவிளம்பரப் பணிகள் தொய்வின்றி நடக்க பழுதடைந்த ஊர்திகளுக்குப் பதிலாக ரூ. 14.25 இலட்சம் செலவில் 2 டெம்போ டிராவலர் ஊர்திகள் வாங்கி வழங்கப்படும்.

[2009 ஜூலை 7

6. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ. *10* இலட்சம் செலவில் *2* பொலீரோ ஊர்திகள் வாங்கி வழங்கப்படும்.

7. செய்தி-மக்கள் தொடர்புத் துறை தலைமையகத்தில் நிருவாகப் பணிகள் துரிதமாக நடக்க ஏனைய துறைகளில் உள்ளது போல் ரூ. *1.50* இலட்சம் செலவில் ஒரு டிஜிட்டல் நகலெடுக்கும் இயந்திரம் வாங்கி வழங்கப்படும்.

8. மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் பழுதான ஒளி நகலெடுக்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ.*1* இலட்சம் செலவில் *5* புதிய ஒளிநகல் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

9. பெருகிவரும் ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கைக்கேற்ப, செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு துணை சாதனங்களுடன் ரூ. *0.90* இலட்சம் செலவில் இரண்டு கணினிகள் வாங்கி வழங்கப்படும்.

10. மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு ஆகிய போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுபவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கும் மாநிலச் செய்தி நிலைய நூலகத்திலுள்ள புத்தகங்கள் ரூ. *1* இலட்சம் செலவில் பைண்டு செய்யப்படும்.

11. தலைமையகம் மற்றும் புதிதாகத் தொடங்கப்பட்ட மூன்று மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு ரூ. *12.50* இலட்சம் செலவில் *5* நிக்கான் D*200* டிஜிட்டல் காமிராக்கள் துணை சாதனங்களுடன் வாங்கி வழங்கப்படும்.

12. இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் நவம்பர் *23* அன்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாள் அரசின் சார்பில் கொண்டாடப்படும்.

13. மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் தியாக சீலர் கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.